بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

ISLAMIC SCIENCE
PART 1

Federation of Islamic Defence and Administrative Authority

இஸ்லாமிய விஞ்ஞானம்

முதல் பாகம்

BY

AL-AALIM SHEIKH SHOIB AKTHAR (AD-DA'I, AL-MUQAWIL)

PRINCIPAL OF HASSANIYA ISLAMIC & THEOLOGICAL ACADEMY, FOUNDER OF AL-MADRASATHUL LAAIQA AND BULDOSOFT ACADEMY, ISLAMIC RESEARCHER AT AIRDC (ADVANCE ISLAMIC RESEARCH AND DEVELOPMENT CONSORTIUM) OF FIDAA (FEDERATION OF ISLAMIC DEFENCE AND ADMINISTRATIVE AUTHORITY), DATA SCIENTIST AT THE UNIVERSAL BUREAU OF EDUCATION, SYLLABUS DEVELOPER AT AABID EDUCATION - CENTRE OF INTELLECT, PRESIDENT OF IQRA (INTERNATIONAL QURAN READING ASSESMENT) AND SECRETARY OF MADRASA.LK

மனிதன் தவறிழைக்க கூடியவனே
இது எங்கள் முதல் முயற்சி என்பதால் தவறு ஏதேனும் இருப்பின் சுட்டிக் காட்டவும்

ISBN

ISBN 978-624-93074-0-7

CONTACT: +94711907909

ISLAMIC SCIENCE
இஸ்லாமிய விஞ்ஞானம்

இஸ்லாத்தினை ஆராய்ச்சி செய்யலாமா?

இன்றைய எமது சமூகத்தினுடைய பார்வையில் இஸ்லாம் மற்றும் விஞ்ஞானம் என்கின்ற இரு பெருந்துறைகள் பற்றிய ஒரு தெளிவு காணப்படுகின்றது. ஆனால் அவை இரண்டும் எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதில் தான் குழப்பநிலையும், முரண்பாடுகளும் ஆரம்பமாகின்றன எனலாம்.

ஏனெனில் இஸ்லாம் என்பது வெறுமனே வணக்க வழிபாடுகளுடனும், பள்ளிவாயல்களுடனும் சுருங்கிவிட்டது. இதனால் சமூகத்தில் இஸ்லாம் என்பது ஒரு குறுகிய பரப்பைக் கொண்ட ஒரு பாடமாகவே கருத்தப்படுகின்றது.

ஆனால் விஞ்ஞானமோ ஓர் உயரிய கற்கை பிரிவாகவும், பரந்துபட்ட அறிவுத்தொகுப்பை கொண்ட விடயமாகவும் கணிக்கப்படுகின்றது. ஆனால் இவர்களிடையே இஸ்லாம் என்றால் என்ன? விஞ்ஞானம் என்றால் என்ன? என்பது பற்றிய போதிய விளக்கமோ, தெளிவோ கிடையாது.
இதனால் தான் இஸ்லாத்தை விஞ்ஞான ரீதியான கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு இந்த சமூகம் தயங்குகின்றது எனலாம். இவ்வுலகிலுள்ள அனைத்து நூல்களை எடுத்துக் கொண்டாலும்; அல்குர்ஆனை விட பெரிய மருத்துவவியல், புவியியல், வரலாறு, இலக்கணம், மொழியியல், தத்துவவியல், அரசியல், சட்டவியல் மற்றும் விஞ்ஞானம் என்பவற்றை உள்ளடக்கிய நூல் ஒன்றினை எவராலும் உருவாக்கவோ, கொண்டு வரவோ முடியாது. இது உலகறிந்த உண்மையாகும். இதனை இன்றைய நவீன உலகின் விஞ்ஞானிகளும் ஏற்று வருவதுடன் அவர்களது ஆய்வுகளும் பறைசாற்றுகின்றன எனலாம்.

எனவே இவ்வாறு இருக்கையில் நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போம். இவ் உலகையும் பிரபஞ்சத்தையும் படைத்து பரிபாலிக்கக் கூடிய ஏகவல்ல நாயகனின் தனிப்பெரும் பேச்சுத் தொகுப்பே அல் குர்ஆன் ஆகும்.

அவ் அல் குர்ஆனில் உள்ளடங்கியுள்ள ஒரு துறையே விஞ்ஞானம் ஆகும். அத்துறையே உலகைக் கட்டியாளும் அளவிற்கு பரந்துள்ளது என்றால் ; முழு மொத்த குர்ஆனையும் தாங்கி நிற்கும் இஸ்லாம் எந்த அளவிற்கு மகத்துவம் மிக்கதாகவும், பெரும் பரப்பைக் கொண்டதாகவும் இருக்கும். எனவே இஸ்லாத்தை விஞ்ஞான ரீதியான கண்ணோட்டத்தில் அணுகுவதில் தவறு ஏதுமில்லை. மாறாக, அது இன்றைய காலத்தின் தேவைப்பாடாகும்.

அது மற்றுமின்றி அல்குர்ஆனும் சிந்தியுங்கள், ஆராய்ச்சி செய்யுங்கள் என்றே கூறுகின்றது. இதற்கான எடுத்துக்காட்டுகளாக பின்வரும் அல்குர்ஆன் வசனங்களைக் கருதலாம்.

كِتَٰبٌ أَنزَلۡنَٰهُ إِلَيۡكَ مُبَٰرَكٞ لِّيَدَّبَّرُوٓاْ ءَايَٰتِهِۦ وَلِيَتَذَكَّرَ أُوْلُواْ ٱلۡأَلۡبَٰبِ ٢٩

"நபியே! பாக்கியம் பெற்ற இவ் வேதத்தை உம்மீது நாம் இறக்கிவைத்தோம். அறிவுடையவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆராய்ந்து, நல்லுணர்வு பெறுவார்களாக!"(38:29)

இந்த அல்குர்ஆனுடைய வசனத்தை நாம் சற்று ஆழமாக சிந்தித்துப் பார்போமாயின், இவ் வசனமானது சிந்தியுங்கள், மேலும் ஆராய்ச்சி செய்யுங்கள் என மனிதர்களைத் தூண்டுகின்றது.

அவ்வாறாயின் ஆராய்ச்சி செய்வதை அல்லாஹ் மனிதன் மீது கடமையாக்கியுள்ளான். ஆனால் நாம் அவனது கட்டளையை செயற்படுத்தாமல் மாறாக சிந்திப்பது தவறு; அது ஷைத்தானுடைய வழியில் அழைத்து சென்றுவிடும் என கூறிக் கொண்டும், இன்னும் தெளிவான அல்குர்ஆனுடைய வசனங்களையும் அல்லாஹ்வுடைய கட்டளைகளையும் மறுத்து மாறு செய்து கொண்டும் , அல்லவா இருக்கின்றோம்.

இவ்வாறு கூறிக்கொண்டும் மனித சமூகத்தின் சிந்தனைக்கு திரையிட்டுக் கொண்டும் இருப்பது மூடநம்பிக்கையும், முட்டாள்தனமுமே அன்றி வேறு எதுவும் கிடையாது. ஒரு விடயத்தினை ஆராய்ச்சி செய்யாமல் எதனையும் நம்பாதே! ஏன்? எதற்கு? என ஆராய்ச்சி செய்ய வேண்டுமென மார்க்கம் தெளிவாக கூறிவிட்டது. இதற்கப்பால் சிந்திப்பது வழிகேட்டின் விளிம்பு எனக்கூறிக் கொண்டு திரிவதற்கான காரணம் : இங்கு கேட்கப்படுகின்ற வினாக்களுக்கான பதில்கள் யாரிடத்திலுமே இல்லை என்பதானால் ஆகும்.

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَٰٓئِكَةِ إِنِّي جَاعِلٌ فِي ٱلْأَرْضِ خَلِيفَةً ۖ قَالُوٓا۟
أَتَجْعَلُ فِيهَا مَن يُفْسِدُ فِيهَا وَيَسْفِكُ ٱلدِّمَآءَ وَنَحْنُ نُسَبِّحُ
بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ ۖ قَالَ إِنِّيٓ أَعْلَمُ مَا لَا تَعْلَمُونَ ﴿٣٠﴾

"நான் பூமியில் என்னுடைய பிரதிநிதியை நிச்சயமாக ஆக்கப்போகின்றேன். " (2:30)

மேற்குறிப்பிடப்பட்ட அல்குர்ஆன் வசனத்தை அவதானிக்கையில் அல்லாஹ் மனிதர்களை அவனுடைய பிரதிநிதிகளாக இந்த பூமியில் படைத்திருக்கின்றான். ஆனால் பிறமதங்களோ மனிதனை தாழ்வாகவே குறிப்பிடுகின்றன.

உதாரணங்கள் பின்வருமாறு :-

டாவினிசம் - பேசும் குரங்கு
காரள்மாக்ஸ் - பொருளாதார பிராணி
பௌத்தமதம் - முற்பிறவியின் கர்மவினைகளை அனுபவிக்கப் பிறந்தவன்.
கிறிஸ்தவமதம் - பாவத்தோடு பிறந்தவனே மனிதன்.
சமூகவியலாளர்கள் - சமூகப்பிராணி

பிற மதங்களும், கொள்கைகளும் மனிதனை இவ்வாறு குறிப்பிடுகின்ற பொழுது அல்லாஹ்வோ (2:30) தனது திருமறையில் நான் எனது பிரதிநிதியை படைக்கப் போகின்றேன் என மனிதனை உயர்வுபடுத்துகின்றான்.

எனவே அல்லாஹ் இந்தப் பிரபஞ்சத்தை படைத்து அதிலுள்ள ஏனைய படைப்புக்கள் அனைத்தையும் விடவும் மனிதனை உயர்வான படைப்பாக ஆக்கியுள்ளான். மனிதர்களுக்கு அல்லாஹ் பகுத்தறிந்து கொள்ளக்கூடிய அறிவையும் வழங்கி ஆராயுமாறு கட்டளையிட்டுள்ளான். (அல் குர்ஆன் 38:29) இதன்படி ஒரு விடயத்தினை பற்றிய தெளிவு இல்லாமல் கண்ணை மூடிக்கொண்டு நம்புவதாக இருந்தால் மனிதனை இந்தளவிற்கு உயர்வுபடுத்தியிருக்க தேவையில்லை.

அதுமாத்திரமின்றி அல்குர்ஆனை ஓதுவது நன்மை என்பதற்காக அல்குர்ஆன் என்ன சொல்கின்றது? என்ற அர்த்தம் தெரியாமலேயே அதனை ஓதிக்கொண்டு இருக்கின்றோம். அவ்வாறு அதன் அர்த்தம் தெரியாமல் ஓதுவதால் என்ன பயன் இருக்கப்போகின்றது. அல்குர்ஆனை மனனம் செய்து கொண்டு ஓதுவதால் மாத்திரம் இஸ்லாத்தை அறிந்து கொள்ள முடியாது.
அதன் அர்த்தம் அறிந்து ஓத வேண்டும். இதனைத்தான் அல்குர்ஆனில் "அறிவுடையோர் ஆய்வு செய்து நல்லுணர்வு பெறுவார்களாக"!(38:29)
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

أَفَلَا يَتَدَبَّرُونَ ٱلْقُرْءَانَ أَمْ عَلَىٰ قُلُوبٍ أَقْفَالُهَآ ﴿٢٤﴾

"மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்களது இதயங்கள் இருக்கின்றனவே அவற்றின் மீது பூட்டு போடப்பட்டு விட்டனவா?"(47:24)

இன்று நம்மில் அநேகமானவர்கள் அல்குர்ஆன் என்ன கூறுகின்றது என்பதனை அறியாமலேயே அதனை ஓதிக்கொண்டு மட்டும் இருக்கின்றார்கள். இந்நிலையில் அல்குர்ஆனை மனனமிடுவதில் மாத்திரம் என்ன பலன் என்பதனை நாம் சிந்திக்கவில்லையே! அவ்வாறு நாம் சிந்திக்காமல் இருக்கின்றோமாயின் நமது இதயங்களில் ஷைத்தான் பூட்டு போட்டு விட்டுள்ளான்.

إِنَّ ٱلَّذِينَ ٱرۡتَدُّواْ عَلَىٰٓ أَدۡبَٰرِهِم مِّنۢ بَعۡدِ مَا تَبَيَّنَ لَهُمُ ٱلۡهُدَى ۙ
ٱلشَّيۡطَٰنُ سَوَّلَ لَهُمۡ وَأَمۡلَىٰ لَهُمۡ ﴿٢٥﴾

நிச்சயாமக எவர்களுக்கு நேர்வழி இன்னதென்று தெளிவானதன் பின்னரும். அவர்கள் தங்கள் முதுகுகளை திருப்பிக் கொண்டு போகிறார்களோ (அவ்வாறு போவதை) ஷைத்தான் அவர்களுக்கு அழகாக்கி (அவர்களுடைய தவறான எண்ணங்களையும்) பெருக்கிவிட்டான்.(47:25)

அல்லாஹ்வினுடைய அருளைப்பெற்றவர்கள் சிந்திப்பவர்களாகவும், ஏனையோர் ஷைத்தானைப் பின்பற்றுபவர்களாகவும் இருப்பார்கள். அல்குர்ஆன் வசனங்களை ஒருபோதுமே தேடுவதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும். தடைவிதிக்கவில்லை. அல்குர்ஆனை ஓதுவது நன்மையாயினும் ; அதனை விளங்காதிருப்பதில் பயனேதுமில்லை.

وَإِذَا جَآءَهُمۡ أَمۡرٞ مِّنَ ٱلۡأَمۡنِ أَوِ ٱلۡخَوۡفِ أَذَاعُواْ بِهِۦۖ وَلَوۡ رَدُّوهُ إِلَى
ٱلرَّسُولِ وَإِلَىٰٓ أُوْلِي ٱلۡأَمۡرِ مِنۡهُمۡ لَعَلِمَهُ ٱلَّذِينَ يَسۡتَنۢبِطُونَهُۥ مِنۡهُمۡۗ
وَلَوۡلَا فَضۡلُ ٱللَّهِ عَلَيۡكُمۡ وَرَحۡمَتُهُۥ لَٱتَّبَعۡتُمُ ٱلشَّيۡطَٰنَ إِلَّا
قَلِيلٗا ﴿٨٣﴾

மேலும் "பாதுகாப்பு / பயம் பற்றிய செய்தி அவர்களுக்கு எட்டினால் , உடனே அவர்கள் அதனை (மனிதர்களிடம்) பரப்பி விடுகின்றனர். ஆனால் அதனை(ப் பரப்பிடுவதற்கு முன் அல்லாஹ்வின்) தூதரிடமும், அவர்களுடைய அதிகாரிகளிடமும் அறிவித் திருந்தால் அவர்களில் இருந்து அதை யூகித்து அறியக் கூடியவர்கள் அதை நன்கறிந்து கொள்வார்கள். அல்லாஹ்வுடைய கருணையும் அவனுடைய அருளும் உங்கள் மீது இல்லாது இருந்திருந்தால் உங்களில் சிலரைத் தவிர நீங்கள் அனைவரும் ஷைத்தானையே பின்பற்றி இருப்பீர்கள்".(4:83)

எனவே இவ்வசனத்தை தெளிவாக உணர்ந்து கொள்வோமாயின், இஸ்லாமானது ஆராயப்பட வேண்டிய ஒரு விடயம் என்பதையும் இஸ்லாத்தை ஆராய்ந்து, ஆய்வு செய்து, தெளிவு பெறுவது ஒரு முஸ்லிமினுடைய கடமை என்பதையும் எம்மால் அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு இஸ்லாத்தை ஆராய்ச்சி செய்வதே 'இஸ்லாமிய விஞ்ஞானம்' ஆகும்.

எம்மில் சிலரிடம் ஒரு தவறான பார்வையுள்ளது. அல்குர்ஆன் 14ம் நூற்றாண்டுகளின் முன்னர் அருளப்பட்ட வேதம், அதனால் அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் அந்த காலகட்டத்திற்கு மாத்திரமே பொருத்தமானது, தற்காலத்திற்கு பொருத்தமற்றது என குர்ஆனை கடமைக்காக மட்டும் ஓதுவோரும் உள்ளனர். ஆனால் இது தவறானது. ஏனெனில் அல்குர்ஆனை எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகவே அல்லாஹ் இறக்கியுள்ளான்.

ஆகவே தான், அல்குர்ஆன் என்ன சொல்கின்றது? என்பதை முதலில் உணர்ந்து கொண்டால் தான் அது பற்றிய தெளிவினைப் பெற முடியும்.

فَوَيْلٌ لِّلَّذِينَ يَكْتُبُونَ ٱلْكِتَٰبَ بِأَيْدِيهِمْ ثُمَّ يَقُولُونَ هَٰذَا مِنْ
عِندِ ٱللَّهِ لِيَشْتَرُوا۟ بِهِۦ ثَمَنًا قَلِيلًا ۖ فَوَيْلٌ لَّهُم مِّمَّا كَتَبَتْ
أَيْدِيهِمْ وَوَيْلٌ لَّهُم مِّمَّا يَكْسِبُونَ ﴿٧٩﴾

"அற்ப கிரயத்தைப் பெறுவதற்காக தம் கரங்களினாலேயே நூல்களை எழுதி விற்றுக்கொண்டு பின்னர் அது அல்லாஹ்விடமிருந்து வந்தது என கூறுகின்றார்களோ, அவர்களுக்கு கேடுதான். (அதை) அவர்களுடைய கைகள் எழுதினாலும் அவர்களுக்குக் கேடுதான். அதிலிருந்து அவர்கள் ஈட்டும் சம்பாத்தியத்திலும் அவர்களுக்குக் கேடுதான். (2:79)

அல்லாஹ் ஆராயுமாறும், தேடியறிந்து கொள்ளுமாறும் கட்டளையிட்டுள்ளான். எம்மில் சிலர் இதனை இலாபம் பெறும் நோக்கில் பொய்யான விடயங்களை உள்ளடக்கி நூல்களை எழுதுகின்றனர்.

இதனை எம்மால் அநேகமான இடங்களில் பார்க்க முடிகின்றது. நபிமார்களின் வரலாறுகளில் பொய்யான விடயங்களை உள்ளடக்குவது, ஸஹாபாக்கள் விடயத்தில் பொய்யை பரப்புவது என பல மோசடிகள் செய்கின்றனர். இன்னும் சிலர் இதனையும் தாண்டிச் சென்று ஆதம்(அலை), நூஹ் (அலை) அவர்களின் வரலாறு என்ற பெயரில் பொய்யான தொகுப்புக்களை எழுதி வெளியிடுகின்றனர்.

சிந்தியுங்கள்! முஹம்மது நபி (ஸல்) அவர்களைப்பற்றி கூறப்படும் தகவல்களை ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள் என கூடவே இருந்து அவதானித்தோரிடம் இருந்து அறிய முடியும்.

ஆனால் ஆதம் (அலை) , நூஹ் (அலை) போன்றோரது வரலாறுகளை எல்லாம் சொன்னது யார்? அல்லாஹ் தான் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்திருக்க வேண்டும்.
அவ்வாறாயின் அல் குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இல்லாத வரலாற்று சம்பவத்தை யார் இவர்களுக்கு அறிவித்தார்கள்? வெறும் கற்பனைக் கதைகளையும் சேர்த்து வரலாறு எழுதுகின்றார்கள்.
"ஆராயாமல் தங்களது சுய நலன்களுக்காக பொய்களை உருவாக்கும் இவர்களுக்கு கேடுதான்" என (அல்குர்ஆன் 2:79) அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்.

وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ ٱلْكِتَٰبَ إِلَّآ أَمَانِيَّ وَإِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ ﴿٧٨﴾

"மேலும் அவர்களில் எழுத்தறிவில்லாதோரும் உள்ளனர். (கட்டுக்கதைகளை அறிந்து வைத்து இருக்கின்றாரர்களே) தவிர வேதத்தை அறிந்திருக்கவில்லை. அன்றியும் அவர்கள் ஆதாரமற்ற கற்பனை செய்வோர்களாக அன்றி வேறில்லை" (2:78)

இவ்வாறு செய்வதானால் மக்கள் ஆராயாமல் பொய்யான விடயங்களையே நம்புகின்றார்கள். இஸ்லாம் இது போன்ற விடயங்களை தவிர்க்கின்றது. இதனால் தான் தேடியறிவதை வலியுறுத்துகின்றது.

وَقَالُوا۟ لَن تَمَسَّنَا ٱلنَّارُ إِلَّآ أَيَّامًا مَّعْدُودَةً ۚ قُلْ أَتَّخَذْتُمْ عِندَ
ٱللَّهِ عَهْدًا فَلَن يُخْلِفَ ٱللَّهُ عَهْدَهُۥٓ ۖ أَمْ تَقُولُونَ عَلَى ٱللَّهِ مَا لَا
تَعْلَمُونَ ﴿٨٠﴾

ஒரு சில நாட்களினைத் தவிர எங்களை நரக நெருப்பு தீண்டாது. (என அவர்கள் கூறினார்கள்). அல்லாஹ்விடமிருந்து அப்படி ஏதேனுமொரு உறுதி மொழி பெற்றிருக்கின்றீர்களா? அப்படியாயின் அல்லாஹ் தன் உறுதி மொழிக்கு மாற்றம் செய்யவே மாட்டான். அல்லது நீங்கள் அறிந்து இருந்ததை அல்லாஹ் சொன்னதாக இட்டுக்கட்டி கூறுகின்றீர்களா? என்று நபியே அந்த யூதர்களிடம் நீர் கேட்பீராக!. (2:80)

இவ் அல்குர்ஆனுடைய வசனத்தை நாம் நன்கு கூர்ந்து கவனிப்போமாயின் அல்லாஹ் கூறுகின்றான். "உங்களை நரக நெருப்பு தீண்டாது. என உமக்கு வாக்களித்தது யார்?" என கேட்கிறான். ஆம் நம்மில் பலர் நம்பி கொண்டு இருக்கக் கூடிய விடயம் தான் அணுவளவு ஈமான் இருப்பினும் சுவனம் சென்றிட முடியும் என்பதாகும். உண்மையில் இதனை அல்லாஹ் குர்ஆனில் எங்காவது கூறியிருக்கின்றானா? இல்லை.

இதில் சிலர் கூறுவதாவது அல்குர்ஆனில் அல்லாஹ் இதனை யூதர்களுக்குத் தானே குறிப்பிடுகிறான் என்று, அவ்வாறாயின் யூதர்கள் யார்? அல்லாஹ்வுக்கு இணையாக சிலையை வணங்கியவர்களா? நபிமார்களை ஏற்காதவர்களா? இல்லையே அவர்கள் இருந்த நிலையில் அல்குர்ஆன் என்னவென்பதைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை. சொல்லப் போயின் கிறிஸ்தவர்களை விடவும் யூதர்கள் முஸ்லிம்களுடன் அருகில் இருப்பவர்கள் தான்.

அன்று யூதர்கள் செய்த தவறைத் தான் இன்று முஸ்லிம்களும் செய்து கொண்டு இருக்கின்றார்கள். எவ்வாறெனில் பெயரளவில் முஸ்லிமாக இருந்து கொண்டு அல்லாஹ் குர்ஆனில் என்ன சொல்கிறான் என்பதை அறியாமல் தானே இருக்கிறோம். மார்க்கம் தெரியாத யூதர்களுக்கே அந்த நிலைமை என்றால் மார்க்கத்திலேயே இருந்து கொண்டு மார்க்கம் என்றால் என்ன? என்பதே தெரியாமல் இருக்கும் முஸ்லிம்களுடைய நிலைமை எவ்வாறானதாக இருக்கும். சற்று சிந்தித்துப் பாருங்கள்!

நம்முடைய பெற்றோர் முஸ்லிம்களாக இருப்பதனால் நாமும் முஸ்லிம் என தவறாக கருதிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் இங்கு முஸ்லிமாக பிறக்கும் பலர் முர்தத்களாகவே மரணிக்கின்றனர் என்பதே உண்மையாகும்.

இதனால் தான் அல்குர்ஆன் மார்க்கம் என்றால் என்னவென்பதை முழுமையாக தேடி ஆராய்ந்து ஏற்றுக் கொள்பவனே முஸ்லிம் என சுட்டிக் காட்டுகின்றது.

பத்ர் போர்

பத்ர் போர் நடந்த காலம் நபியவர்களுக்கு எதிராக (காபிர்கள்) நின்றவர்கள் அரபு நன்றாக தெரிந்த காபிர்கள் தான். இன்று மத்ரஸா சென்று அரபு படித்துவிட்டோம் எனவே நாமும் இஸ்லாமிய அறிஞர்கள் தான் என்று சிலர் நினைக்கின்றார்கள். அவ்வாறில்லை இஸ்லாம் தெரியாத பட்சத்தில் அரபை மாத்திரம் தெரிந்து கொள்வதால் முஸ்லிமாக முடியாது.

அன்று உமர் (ரழி) அவர்கள் வாளை ஏந்தி நபி(ஸல்) அவர்களை கொலை செய்ய வந்த போது சத்திய மார்க்கத்தை ஏற்பதற்கு முன் உமர் (ரழி) உடைய பெயர் உமராக தான் இருந்தது.

உஹத் போர்க்களத்தில் முஸ்லிம்களை விரட்டி அடித்த காலித் இப்னு வலீத் காபிராக இருக்கும் போதும் அவருடைய பெயரானது காலித் இப்னு வலீத் என்று தான் இருந்தது.
ஆகவே சிந்தித்து பாருங்கள்! அரபு பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு இஸ்லாம் தெரியாதவிடத்து முஸ்லிமாக கருதப்பட மாட்டார்கள்.

அல்குர்ஆனை மனனமிடுவதும் ஓதுவதும் மாத்திரம் அறிவைப் பெற்று தராது மாறாக சிந்திப்பதே அறிவை பெற்று தரும்.

ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால்???

ஒரு சமுதாயத்தினுடைய மொழி, வரலாறு, கலாச்சாரம் என்பவற்றை அழிக்கும் போது அந்த சமூகமே அழிந்து விடும். இந்த நிலை தான் இன்று முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டுள்ளது. நாம் சிந்திக்காமல் செயற்பட்டுக் கொண்டு இருப்பதால் தான் இஸ்லாம் என்ற ஒரு நாகரீகமே அழிவின் விளிம்பிற்கு இன்று கொண்டு வரப்பட்டுள்ளது. அல்குர்ஆன் ஓதுவதற்காக மட்டும் எமக்கு இறக்கி அருளப்படவில்லை. முழு சமூதாயத்திற்கும் வழிகாட்டவே இறக்கி அருளப்பட்டு உள்ளது. அதன் வழிகாட்டலை சரியாகப் பெற வேண்டுமாயின் , இஸ்லாத்தை அனைவரும் ஆராய்ச்சி செய்யத் துவங்க வேண்டும்.

ஆகவே இஸ்லாத்தை ஆராய்ச்சி செய்வதற்கு அல்குர்ஆனில் பல இடங்களில் ஆதாரங்கள் இருப்பதை பார்த்தோம். இதே போன்று தான் நபியவர்களும் ஆராய்ச்சி செய்வதை தேடியறிவதை வலியுறுத்தி இருக்கின்றார்கள். அதுமட்டுமின்றி ஸஹாபாக்களும் ஒரு விடயத்தை கண்ணை மூடிக்கொண்டு செய்யவில்லை. மாறாக ஏன்? எதற்கு ? எப்படி? என பல கேள்விகள் கேட்டுத்தான் இருக்கின்றார்கள்.

EX : உலகம் எவ்வாறு தோன்றியது?

அல்லாஹ் எவ்வாறு இருப்பான்?

இவ்வுலக மதங்களில் கல்வி , தேடல் , ஆராய்ச்சி ஆகியவற்றுக்கு அதிமுக்கிய இடம் கொடுத்த மார்க்கம் என்றால் அது இஸ்லாம் தான். இவ்வாறு தேடலின் அவசியத்தையும் அடிப்படையையும் உணர்த்திய மார்க்கத்தில் நவீன அறிவியியல் மேதைகளும், அறிஞர்களும் விரல் விட்டு எண்ணக்கூடிய வர்களாகத்தான் காணப்படுகின்றனர் .

இஸ்லாத்தினுடைய பொற்காலம்

இஸ்லாமிய பொற்காலம் (Islamic Golden Age) என்பது எட்டாம் நூற்றாண்டு முதல் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையான, பக்தாத்தை ஆண்டுவந்த அப்பாஸியர்களின் காலகட்டத்தை குறிப்பதாகும். எட்டாம் நூற்றாண்டின் மத்தியில் அப்பாஸியக் கலீபாக்கள், தங்கள் தலைநகரை டமஸ்கஸ் நகரில் இருந்து பக்தாத்திற்கு மாற்றியதை தொடர்ந்து இஸ்லாமிய கலாச்சாரம் ஏற்றம் காண தொடங்கியது. இந்த காலகட்டத்தில் பொறியியல், வணிகம், பொருளாதாரம், அறிவியல், தொழிநுட்பம், கட்டடக்கலை, விவசாயம், ஓவியம், சட்டம், இலக்கியம், தத்துவம், கடற்பயணம் என பல துறைகளிலும் இஸ்லாமியர்களின் பங்களிப்பு மிகுந்து இருந்தது.

பைத்துல் ஹிக்மா (ஞானத்தின் இல்லம்) எனும் நூலகம் ஏற்படுத்தப்பட்டு, உலகின் பழமையான புத்தகங்களும், இலக்கியங்களும் அரபு மற்றும் பாரசீக மொழியில் தொகுக்கப்பட்டன. பின்னர் இவை இலத்தீன், எபிரேயம், துருக்கியம் போன்ற மொழிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டதுடன் மற்ற சமயத்தவரின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டன. இந்த காலகட்டத்தில் தான் இந்தியர்களின் கணித எண்னான சுழி (0) அரபுலகத்துக்கு ஏற்றுமதியானது. பிரபல அரபு கணிதவியலாளரான அல்-குவாரிஸ்மி இதன் முக்கியத்துவத்தை பிரபலப்படுத்தத் தொடங்கியதை அடுத்து, சுழியம் 12ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவுக்கு அறிமுகமாகியது.

தொடர்ந்து நடைபெற்ற சிலுவைப் போர்களை அடுத்து சரிவை சந்திக்கத் தொடங்கிய இஸ்லாமிய பொற்கால ஆட்சி, 1258ல் ஏற்பட்ட மங்கோலிய தாத்தாரியர்களின் படையெடுப்பை அடுத்து முடிவுக்கு வந்தது.

அல் பிருனி, அல் பராபி, இப்னு சீனா, அல்-குவாரிஸ்மி, இப்னு துர்க், ஓமர் கய்யாம், அல் கஸ்ஸாலி ஆகியோர் இந்த கால கட்டத்தில் வாழ்ந்து வந்த சில முக்கிய நபர்கள் ஆவர்.

தற்கால உலகில் ஆராய்ச்சியாளர்களில் அநேகமானவர்கள் மாற்று மதத்தை சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இதற்கான காரணம் முஸ்லிம்கள் அனைவரும் கல்வியை உலகக்கல்வி, மார்க்கக் கல்வி என 02 வகைப்படுத்தி அதில் மார்க்கக் கல்விக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கியமையாகும். முஸ்லிம்கள் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் என்பவற்றிக்கு உள்ளே மாத்திரம் தங்களது அறிவினை சுருக்கிக் கொண்டமை தான் இதற்கான காரணமாகும்.

அல்குர்ஆனையும் , ஹதீஸையும் மாத்திரம் கற்குமாறு அல்லாஹ்வோ /நபிகளாரோ எங்குமே குறிப்பிடவில்லை. மாறாக நபி (ஸல்) அவர்களது காலகட்டத்தில் மார்க்கக் கல்வி, உலகக் கல்வி என்ற பாகுபாடே இருக்கவில்லை.

source: wikipedia

அல்குர்ஆனில் குறிப்பிடப்படாத வழிகாட்டல்கள் , துறைகள் என்று எவராலும் எதனையுமே குறிப்பிட முடியாது. ஏனெனில் அல்குர்ஆன் தான் உலகிலேயே தலைசிறந்த இலக்கணம், இலக்கியம், வரலாறு, புவியியல், மருத்துவம், விஞ்ஞானம், அரசியல், சமூகவியல், பொருளாதாரம் மற்றும் குற்றவியல் சட்ட நூல் தொகுப்பாகவும் காணப்படுகின்றது.

எனவே அல்குர்ஆன் உலகிற்கு இறக்கியருளப்பட்டதை அடுத்து அது மக்களை சிந்திக்கவும் ஆராய்ச்சி செய்யவும் தூண்டியது. இதன் விளைவாக அக்கால மக்கள் யாவரும் ஆராய்ச்சியால் தூண்டப்பட்டார்கள். இது கி.பி.07 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியாகும். இந்தக்காலத்தை மிகவும் கூர்ந்து அவதானிப்போமேயாயின் இன்றைய நவீன உலகின் அறிவியல் தேசமென கூறப்படுகின்ற ஐரோப்பாவானது முஸ்லிம்களுடைய எழுச்சிக் காலகட்டத்தில் அறிவியலின் இருளில் மூழ்கிப்போய் இருந்தது என்றே கூற வேண்டும். ஆம் , 7ஆம் நூற்றாண்டினுடைய ஐரோப்பா மற்றும் இஸ்லாமிய உலகினுடைய நிலை எவ்வாறு இருந்தது என்பதை நோக்குகையில், இஸ்லாமிய உலகோ அறிவியலின் தேடலில் ஈர்க்கப்பட்டு தங்களுக்கு எந்தத் துறையில் எந்தப்பிரிவில் ஆர்வம் இருந்ததோ அதனை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்புக்களை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

ஆம், அவர்கள் அனைவரும் அல்குர்ஆனை கற்றதோடு நின்று விடாமல் அல்குர்ஆன் கூறியபடி ஆராய ஆரம்பித்தார்கள். அதன் விளைவாக உலகையே திகைக்கச் செய்தார்கள். அன்று அவர்களால் முடிந்த காரியம் இன்று ஏன் எம்மால் முடியவில்லை? காரணம் இன்று எம்மில் எவருக்குமே சிந்திப்பதற்கு தைரியமும் தேடியறிய ஆர்வமும் இல்லை. நாங்களும் முஸ்லிம்கள் என்ற பெயரில் எமது திறமைகளை தூக்கி மேற்குலகிற்கு கொடுத்துவிட்டு அவர்களினுடைய அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உண்மையில் அது இஸ்லாத்தினுடைய பொற்காலம் என்றால் அப்போது இருண்ட யுகம் என அடையாளப்படுத்தப்படுவது எது? இருண்ட யுகமும் முஸ்லிம்களினுடைய பொற்காலமும் ஒரே காலப்பகுதி தான். ஆனால் பிரதேசங்கள் தான் வெவ்வேறானவை ஆகும்.

இருண்ட யுகம் நிலவிய பிரதேசம் ஐரோப்பாவாகும். முஸ்லிம்கள் அறிவியல் ஆராய்ச்சியில் திளைத்திருந்த வேளையில் இன்று எமது சமூகத்தின் நிலையை போன்று ஐரோப்பாவோ சிந்திப்பது பாவம் சாபக்கேடு என எண்ணிக்கொண்டிருந்தது. இதனால் ஐரோப்பா இருண்டு போய் இருந்தது என அடையாளப்படுத்தப்பட்டது .

EX:- எதென்ஸ் நகர இளைஞனுக்கு ஆய்வு ஆர்வத்தை தூண்டியதற்காக சோக்ரடீஸ்க்கு நஞ்சூட்டப்பட்டது.

கிரேக்கத்தில் எஸ்கிலஸ், யூரிபிடிஸ், ஃபிடியாஸ், சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில் ஆகியோர் இம்சிக்கப்பட்டனர் .(சிறையிலிடல், தூக்கிலிடல்)

பாப்பரசர் இரண்டாம் சில்வஸ்டர்:- அறிவியலை கற்றதற்காக மக்கள் சமூகத்தில் இருந்து அவரை ஒதுக்கி வைத்தனர்.
மேலும் இந்த இருண்ட யுகம் பற்றி கூறுகையில் விக்டர் ரொபின்சன் கூறுவதாவது:-

- "சூரியன் மறைந்த உடன் ஐரோப்பா இருளில் மூழ்கிவிடும்."
- கொர்டோவா பிரகாசித்துக் கொண்டே இருந்த வேளையில், ஐரோப்பா அழுக்கடைந்து துர்நாற்றத்தால் அழுகியது.
- ஐரோப்பா சேற்றில் புதைந்து கிடந்த போது, கொர்டோவாவில் ஆயிரம் குளியலறைகள் காணப்பட்டன .
- ஐரோப்பிய பிரபுக்கள் கையொப்பமிட அறியாத போது, கொர்டோவா சிறுவர்கள் பாடசாலை சென்று திரும்பினர்.
- கொர்டோவாவில் செப்பனிடப்பட்ட பாதைகள் இருந்தன. மேலும் நூலகங்கள் நிறைந்திருந்தது.

இதிலிருந்து ஐரோப்பிய உலகும், இஸ்லாமிய உலகும் அறிவியலில் எவ்வாறான நிலைமையில் காணப்பட்டது என்பதை எம்மால் தெளிவாக இனங்கண்டு கொள்ள முடிவதோடு, இந்த அறிவியல் ரீதியான முன்னேற்றத்துக்கு இஸ்லாமிய அறிஞர்களைத் தூண்டிய மிகப்பெரும் உந்து சக்தி அல்குர்ஆனே ஆகும். எனவே இஸ்லாத்தை ஆராய்ச்சி செய்யும் போது தான் சமூகம் எழுச்சி அடைகின்றது என்பது தெளிவான உண்மையாகும்.

இதற்கு சில உதாரணங்களாக

இப்னு அல்-ஹய்தம் : கமரா

இப்னு அல்-ஹய்தம் என்பவர் கண்களினுடைய அசைவைக் கொண்டு ஒரு சிறிய துளையின் வழியாக இருட்டு அறையினுடைய இடைவெளியில் படிமம் ஒன்றை நெறிப்படுத்தும் அடிப்படையினை கண்டுபிடித்தார்.
இது பிற்காலத்தில் கமராவினுடைய பாவனைக்கும் சினிமாத் துறையின் வளர்ச்சிக்கும் அடித்தளமாய் அமைந்தது .

பார்வைக் கோட்பாட்டை முதன்முதலில் சரியாக விளக்கிய இவர், பார்வை மூளையில் நிகழ்கிறது என்று வாதிட்டார்.

இது அகநிலை மற்றும் தனிப்பட்ட அனுபவத்தால் பாதிக்கப்படும் அவதானிப்புகளை சுட்டிக்காட்டுகின்றது. பின்னாளில் ஃபெர்மட்டின் கொள்கையாக மாறிய ஒளிவிலகலுக்கு குறைந்த நேரம் என்ற கொள்கையையும் கூறினார். கருதுகோள்களின் நம்பகத்தன்மையான நடைமுறைகள் அல்லது கணித சான்றுகளின் அடிப்படையில் ஒரு கருதுகோள் நிரூபணம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். எனவே மறுமலர்ச்சி விஞ்ஞானிகளுக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கும் முன்னரே அறிவியல், அறிவு , வழி முறைகளைப் புரிந்து கொண்டார். ஒரு பொருளின் மீது ஒரு கணம் ஒளிபட்டு கண்ணை நோக்கித் திரும்பும்போது, அப்பொருள் நம் பார்வைக்குப் புலப்படுகின்றது என்பதை முதலில் விளக்கினார். இதன் காரணமாக, இவர் சில நேரங்களில் உலகின் "முதல் உண்மையான விஞ்ஞானி" என்று விவரிக்கப்படுகின்றார். இவர் மெய்யியல், இறையியல் மற்றும் மருத்துவம் ஆகியவற்றை எழுதும் ஒரு பல்துறை வல்லுநராகவும் இருந்தார்.

அப்பாஸ் இப்னு ஃ பிர்னாஸ் :- ரைட் சகோதரர்கள் விமானத்தினை கண்டுபிடிப்பதற்கு 1000 வருடங்களுக்கு முன்னரே விமானத்தை கண்டுப்பிடித்தார். ஆனால் விமானம் தரையிறங்குவதற்கு வாற்பகுதி தேவை என்பதை மறந்து விட்டார்.

அப்பாஸ் இப்னு ஃபிர்னாஸ்

அல்-ஸஹ்ராவி: அறுவை சிகிச்சை

இவர் அறுவை சிகிச்சை முறைமையினையும் அறுவை சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களையும் கண்டுபிடித்ததோடு அறுவை சிகிச்சையினுடைய தந்தை எனவும் போற்றப்படுகின்றார்.

அது மட்டுமில்லாமல் இன்னும் நவீன மருத்துவத்தில் உள்ள (Catgut) அதாவது (விலங்கிழையத்தையல்) முறைமையினையும் இவ்வுலகிற்கு அறிமுகம் செய்தவர் இவரே.

இவர் இஸ்லாமிய உலகினுடைய பெண் அறிவியலாளர் ஆவார். இதிலிருந்து இஸ்லாம் பெண்களுக்கு எவ்வளவு உரிமை வழங்கியுள்ளது என்பதை தெளிவாக விளங்க முடிகிறது. இவர் ஆஸ்ட்ரோலேப் (Astrolabes) என்று அழைக்கப்படும் கருவியை கண்டுபிடித்தார். இது இன்றைய கணிப்பான், கடிகாரம் மற்றும் விண்கலம் என்பவற்றின் அடிப்படையாக உள்ளது.

மர்யம் அல்-அஸ்ருலபி : அஸ்ருலபிஸ்

அல்-ஜஸரி: கடிகாரம்

இன்றைய நவீன இயந்திரவியலுக்கு அடித்தளமிட்டவரே இவர் என்றுதான் கூற வேண்டும். இவரது கண்டுபிடிப்பினால் தான் இயந்திரப் புரட்சியே ஏற்பட்டது. அது மட்டுமன்றி இவர் காலம் காட்டக் கூடிய கடிகாரம் ஒன்றினையும் கண்டுபிடித்தார். இக்கடிகாரத்தில் பாரம்பரிய அதிசயங்களும் பல நாடுகளினுடைய(இந்திய, சீன, உரோம, கிரேக்க) கலை, கலாசார சிறப்பு அம்சங்களும் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றது.

மேலும் இது 100 பாகங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

இந்து-அரபு எண்ணுருக்கள்

அராபிய எண்ணுரு முறைமை அல்லது இந்து-அரபு எண்ணுரு முறைமை (Hindu–Arabic number system) எனப் பொதுவாக அழைக்கப்படும் எண்ணுரு முறைமையே ,. எண்களைக் குறிக்க மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் குறியீட்டுமுறை, அராபிய எண்ணுரு முறைமை இடஒழுங்கிலமைந்த, [அடி 10] ஐக் கொண்ட ஒரு எண்ணுரு முறைமையாகும். இதில் 10 இலக்கங்களைக் குறிக்க 10 வெவ்வேறான கிளிஃப்(glyphs) உள்ளன. வலது கோடியிலமைந்த இலக்கமே ஆகக்கூடிய பெறுமானத்தைக் கொண்டது. அராபிய எண்ணுரு முறைமை ஒரு பதின்மக் குறியையும் (பொதுவாக ஒரு பதின்மப் புள்ளி அல்லது ஒரு பதின்மக் காற்புள்ளி) பயன்படுத்துகின்றது. இது ஒற்றைத் தானத்தையும், பத்திலொன்றாம் தானத்தையும் பிரிக்கின்றது. இதைவிடப் பதின்மத் தானங்கள் திரும்பத் திரும்ப முடிவிலியாகத் தொடர்வதைக் குறிக்கும் ஒரு குறியீடும் பயன்படுகின்றது. இவ்வாறாக வளர்ச்சியடைந்த இன்றைய அராபிய எண்ணுரு முறைமை எந்தவொரு விகிதமுறு எண்ணையும், 13 கிளிஃப்(glyph) களைப் (பத்து இலக்கங்கள், தசமப் பிரிப்பான், தொகுப்புக்கோடு, எதிரெண்ணைக் குறிக்கும் இடைக்கோடு) பயன்படுத்திக், குறியீடாகத் தரவல்லது.

அராபிய எண்ணுரு முறைமை பலவகையான கிளிஃப்(glyph) தொகுதிகளைப் பயன்படுத்தியுள்ளது. இந்தத் தொகுதிகளை இரண்டு முக்கியக் குடும்பங்களாகப் பிரிக்கலாம். ஒன்று மேற்கு அராபிய எண்ணுருக்கள், மற்றையது கிழக்கு அராபிய எண்ணுருக்கள் ஆகும். இன்றைய ஈராக் நாட்டினுள் அடங்கும் பகுதியில், ஆரம்பத்தில் வளர்ச்சி பெற்ற, கிழக்கு அராபிய எண்ணுருக்கள் "அரபு-இந்திக்" என்னும் பெயரில் கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது. கிழக்கு அரபு-இந்திக் என்பது, கிழக்கு அராபிய எண்ணுருக்களின் ஒரு வகையாகும். ஸ்பெயின், மக்ரெப் போன்ற இடங்களில் வளர்ச்சியடைந்த மேற்கு அராபிய எண்ணுருக்கள், படத்தில் "ஐரோப்பிய" என்று காட்டப்பட்டுள்ளன.

source: wikipedia

European (descended from the West Arabic)	0	1	2	3	4	5	6	7	8	9
Arabic-Indic	٠	١	٢	٣	٤	٥	٦	٧	٨	٩
Eastern Arabic-Indic (Persian and Urdu)	۰	۱	۲	۳	۴	۵	۶	۷	۸	۹
Devanagari (Hindi)	०	१	२	३	४	५	६	७	८	९
Tamil		க	உ	௩	ச	ரு	௬	எ	அ	௯

இன்று நாம் கணிதத்துக்கு பாவிக்கப்படும் அரபு எண்ணுரு முறைமை கூட அரபிகளால் உருவாக்கபட்டதாகும்... அது (அரபு-இந்திக் எண்ணுறு) என்று அழைக்கப்படும்.
உலகில் கணிதவியல்க்கு பெரும் பங்காற்றியவர்கள் முஸ்லிம்கள் ஆவார்கள்...

இன்று பாவிக்கப்படும் 1,2,3,4,5,6,7,8,9 எனும் எண்கள் கூட அரபிகளால் உருவாக்கப்பட்டது தான் ..

வேதியலை பெற்றெடுத்த தாய் இரசவாதம்

இன்று வேதியல் (Chemistry) என்கின்ற துறையை தஜ்ஜாலைப் போல பார்க்கின்றோம். ஆனால் அன்று இந்த வேதியல் (Chemistry) உருவாக மூலதனமா இருந்தது, அதாவது வேதியலை ஒரு தாயாக இருந்து பெற்றெடுத்த இரசவாதத்தில் (Alchemy) முஸ்லிம்களே தேர்ச்சி பெற்று இருந்தனர்.

அல்-கிமியா (الكيمياء), என்ற அராபிய வார்த்தையிலிருந்து பெறப்பட்ட இரசவாதம் (Alchemy) என்பது அறிவியல் ஆய்வு, மறை பொருள் ஆய்வு போன்ற கலவையாக கிரீஸ், சீனா, எகிப்து மற்றும் அரேபியா போன்ற நாடுகளிலிருந்து பெற்றவை எனக் கருதலாம் .

Jabir ibn Hayyan

ஜாபிர் இப்னு ஹய்யான் என்பவர் இரசாவதத்தின் (Alchemy) தந்தை என அழைக்கப்படுகின்றார். இன்று வேதியல் (Chemistry) என்று ஒரு துறை உருவாக மூலகாரணமாக இருந்த இரசவாதம், மறைக்கப்பட்ட நம் சரித்திரத்தில் இரசவாதத்தின் தந்தையாக காணப்பட்டவர் ஜாபிர் இப்னு ஹய்யான் என்பவராவார்.

கெபெர் என்றும் அறியப்படும் அபு மூசா ஜாபிர் இபின் ஹய்யான் (Abu Mūsā Jābir ibn Hayyān) என்பவர், வேதியியலாளர், வானியலாளர், சோதிடர், பொறியியலாளர், புவியியலாளர், மெய்யியலாளர், இயற்பியலாளர், மருத்துவயியலாளர் மற்றும் மருத்துவருமான ஒரு பல்துறை அறிஞர் ஆவார். துஸ் என்னுமிடத்தில் பிறந்து அங்கேயே கல்வி கற்ற இவர் பின்னர் கூஃபாவுக்குச் சென்றார். சில வேளைகளில் இவர் தொடக்ககால வேதியியலின் தந்தை எனக் குறிப்பிடப்படுகிறார்.

ஆரம்பகால நவீன மருத்துவத்தின் தந்தை

நவீன மருத்துவத்தின் தந்தை இப்னு சீனா (Ibn Sina or Avicenna) இபின் சீனா அல்லது அவிசென்னா எனச் சுருக்கமாகவும் அழைப்பதுண்டு . அபு அலி அல்-ஹுஸைன் இபின் அல்லா இபின் சீனா (கிபி 980 – கிபி 1037) பாரசீகத்தைச் சேர்ந்தவராவார். இவர் வானியல், வேதியியல், நிலவியல், ஏரணவியல், தொல்லுயிரியல், கணிதம், இயற்பியல், கவிதை, உளவியல், அறிவியல் போன்ற பல துறைகளிலும் வல்லுநராக இருந்ததுடன், இவர் புகழ்பெற்ற மருத்துவராகவும், மெய்யியலாளராகவும், போர்வீரராகவும், அரசியலாளராகவும், ஆசிரியராகவும் இருந்தார்.



இபின் சீனா 10ஆவது வயதிலையே இஸ்லாமிய அடிப்படை அறிவை பெற்று திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்தார். இவர் இளம் வயதிலையே பல்வேறு ஆசிரியர்களிடம் அல் ஜிப்ரா, வான சாஸ்திரம், தர்க்கவியல், தத்துவம், இறையியல் என்று பல்வேறு விசயங்களை கற்றுக் கொண்டார்.

இவர் தனது 16ஆவது வயதில் மருத்துவத்தில் கவனம் செலுத்தி, 18ம் வயதில் புகழ்பெற்ற மருத்துவராக விளங்கினார். மன்னர் நூஹ் இப்னு மன்சூர் சாமாணி என்பவர் நோய்வாய்பட்டிருந்தபோது அவரது நோயை குணப்படுத்த முடியாமல் பல்வேறு மருத்துவர்கள் திரும்பிச் செல்லவே, இறுதியாக இப்னு சீனா அழைக்கப்பட்டார். இவர் மன்னரின் நோயை குணப்படுத்தியதன் காரணமாக மன்னர் மகிழ்ச்சிப் பெருக்கால் யாருக்கும் அனுமதிக்காத தனது அரச நூலகத்தை பயன்படுத்தும் உரிமையை இப்னு சீனாவிற்கு வழங்கினார். தனது சிகிச்சைக்கு கைமாறாக இதனை கருதிய அவர் அந்நூலகத்தில் பொதிந்திருந்த அரும்பெரும் நூல்களை எல்லாம் கற்று பயனடைந்தார்.

அவர் எழுதிய நூல்களிலே உலகப் புகழ்ப்பெற்ற நூல் அல் கானூன் பித்திப் (The canon of Medicine) ஆகும். இந்நூல் 1270இல் ஹீப்ரு (யூதர்களின்) மொழியிலும் லத்தின் மொழியிலும் மொழிப்பெயர்க்கப்பட்டு, இதன் லத்தின் பிரதிகள் ஐரோப்பாவில் வெளியிடப்பட்டதிலிருந்து 30 பதிப்புகளைக் கண்டுள்ளது..



15ம் நூற்றாண்டில் இந்நூல் குறித்து பல்வேறு விளக்கவுரை நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூலில் உள்ள உடற்கூறு பகுதி மட்டும் நீக்கப்பட்டு, டாக்டர்.O . C Gruner என்பவரால் 1930இல் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. என்றாலும் இந்த 21ஆம் நூற்றாண்டு வரை நீடித்து நிற்கும் இதன் செல்வாக்கை புரிந்துக் கொள்ளலாம்.

இவ்வாறு இப்னு சீனா எழுதிய “அல் – கானூன் பித்திப்” (மருத்துவ நெறிமுறைகள்) என்ற மருத்துவ கலைக் களஞ்சியம் 15ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய பல்கலைகழகங்களின் மருத்துவ பாடத்திட்டத்தில் முக்கிய நூலாக சேர்க்கப்பட்டிருந்தது.

பிரான்ஸ் நாட்டில் அமைந்து இருக்கும் பாரிஸ் மருத்துவ பல்கலைகழகத்தில் இவரது பெயரில் ஆய்வகம் ஒன்று அமைந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் நவீன மருத்துவத் தந்தையாகப் போற்றப்படுகிறார். முக்கியமாக உடலியக்கவியல் ஆராய்ச்சியில் முறைப்படியான பரிசோதனைகளையும் அளவீடுகளையும் முதன்முறையாகப் பயன்படுத்தியதோடு, தொற்றுநோய்களைக் கண்டறிந்தும், அவை தொற்றும் முறைகளை வகைப்படுத்தியும், அவற்றைக் கட்டுபடுத்தும் முறைகளைக் கண்டறிந்தும் அக்கால மருத்துவத் துறைக்குப் பெரும் பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

சிந்தித்துப் பார்த்தால் இன்றைய நவீன அறிவியல் உலகிற்கு சற்றும் சலிக்காத வகையில் பல வகையான அறிவியல் விந்தைகளை நிகழ்த்திய அந்தக் காலகட்டம் இருண்ட உலகம்/ யுகம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அது அல்ல உண்மை அது இஸ்லாமிய உலகினுடைய அறிவியல் எழுச்சியின் பொற்காலமாகும். இந்த உண்மையையும் முஸ்லிம் அறிஞர்களுடைய கண்டுபிடிப்புகளையும் ஐரோப்பிய உலகு திட்டமிட்டு மறைத்துள்ளது. என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

சிந்தித்துப் பாருங்கள் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான கண்டுபிடிப்புகள் அனைத்தும் சாத்தியமானவொன்றாகவும், இன்றிலிருந்து 14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவை கற்பனைக்கு கூட எட்டாத விடயங்களாகவும் இருந்த சமயத்தில் அவற்றை உலகிற்கு சாத்தியப்படுத்த முஸ்லிம் அறிஞர்களால் மாத்திரம் எவ்வாறு முடிந்தது?.

பித்அத் வாதிகளின் கண்ணோட்டம்

சில பித்அத் வாதிகள் கூறுவதாவது இஸ்லாத்தை நவீனத்துவம் செய்ய முடியாது அவ்வாறு செய்வது பாவமாகும் என்கின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லாத மற்றும் செய்யாத ஒரு விடயத்தினை சொல்வதும், செய்வதும் பித்அத்தினுள் அடங்கும் என்கின்றனர். புதுமையான எல்லா விடயங்களுமே வழிகேட்டின் பால் தான் கொண்டு சேர்க்கும், இதனால் புதுமையான விடயங்களை இஸ்லாத்தில் கொண்டு வரக்கூடாது என வாதிட்டு முரண்பட்டுக் கொண்டு திரிகின்றனர்.

இவ்வாறான கருத்துக்களை கூறிக்கொண்டு இருப்பவர்கள் சற்று சிந்திக்க மாட்டார்களா? பித்அத் என்ற பெயரில் அவர்கள் மார்க்கத்தில் மட்டும் தானே பழைமை பேணுகின்றார்கள். நபி(ஸல்) அவர்கள் செய்யாத விடயங்களை செய்யக்கூடாது என்றால் இன்று அவர்கள் முற்று முழுதாக நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் வழிமுறைகளை மட்டும் தான் பின்பற்ற வேண்டும். ஆனால் இன்று எவர்களுமே அவ்வாறு இல்லை என்பதே யதார்த்த நிலைமையாகும்.

அவர்கள் பித்அத் எனக் குறிப்பிடும் விடயங்களை நோக்கினால் :-

Ex : ஆங்கிலம் பேசுவது

மைக்கில் பயான் செய்வது.

ஆன்லைன் மத்ரஸாவினுடைய கல்வி முறை.

Cyber Safety

என பல விடயங்களை அடுக்கிக் கொண்டே போக முடியும். ஆனால் இவ்வாறு கூறுவோர் உண்மையில் நபிகளாரது வாழ்வியல் அம்சங்கள் அனைத்தையும் பின்பற்றி வாழ்கின்றார்களா? என்பது சந்தேகத்திற்குரியது.

அவ்வாறு கூறப்போயின் மின்சாரம், தொலைபேசி, தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள், போக்குவரத்துக்கென பயன்படுத்தும் வாகனங்கள் அனைத்தையும் தவிர்ந்து விட்டு ஒட்டகங்கள், கால்நடைகளில் பயணம் செய்தல், விளக்குகளை பயன்படுத்துதல், மண் தரையில் தொழுகையை செய்தல் என நபி வழிமுறை அனைத்தையும் பின்பற்ற வேண்டும்.

அவ்வாறு இங்கு எவராலும் வாழ முடியாது. பண்பாடு, கலாச்சாரம், மார்க்கம் என தங்களது அறிவுகளில் திரைகளை இட்டுக்கொண்டும் தீங்கிழைத்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஏனெனில் இஸ்லாமானது எக் காலத்திற்குமே பொருத்தமானது. 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துக் கொண்டு இன்னும் நாங்கள்
14ஆம் நூற்றாண்டினுடைய வாழ்க்கை முறைகளை தான் பின்பற்ற வேண்டும் என்றால் அது அசாத்தியமான விடயம் அல்லவா?.



சிந்தனை செய்வதும் ஆய்வு செய்வதும் பித்அத் என்றால் இன்றைய நவீன அறிவியலுக்கு அடித்தளமிட்ட எமது முஸ்லிம் அறிஞர்கள் செய்தது என்ன பாவமான செயலா? அவ்வாறாயின் ஒரு பாவமான செயலை செய்வதற்கா அல்குர்ஆனும் சுன்னாவும் மனிதர்களை தூண்டியது? இஸ்லாம் என்பது ஆராய்ச்சி செய்வதும் தேடி அறிந்து கொள்வதும் தான் என்று அல்குர்ஆன் தெளிவாக கூறியுள்ளது. இதனை ஏற்காதவர்கள் நேரடியாகவே குர்ஆனையும் அதனை இறக்கி அருளிய அல்லாஹ்வையும் நிராகரித்தோர்களாகி ஆகிவிடுவார்கள்.

நாம் மறந்த வரலாற்றை ஒரு சிறு நினைவூட்டல்

HISTORY POWERD BY

BBC

இஸ்லாத்தின் பொற்காலம்: 'ஆபத்தான, மாய மந்திரம்' நிறைந்த கணிதவியலாளர் அல்-குவாரிஸ்மியின் கதை

பிபிசி ரேடியோ 3-யின் சிறப்புத் தொடரான 'இஸ்லாத்தின் பொற்காலம்' என்ற இந்த தொடரில், எழுத்தாளரும் ஒலிபரப்பாளருமான ஜிம் அல் கலீல், அல்-குவாரிஸ்மி பற்றி நமக்குச் சொல்கிறார்.

பிபிசி உருது சேவை, இந்த தொடரை வானொலியில் ஒலிபரப்ப அதை மொழிபெயர்த்துள்ளனர்.

முகமது இப்னே மூசா அல்-குவாரிஸ்மி ஒரு பாரசீக கணிதவியலாளர், வானியலாளர், ஜோதிடர், புவியியலாளர் மற்றும் அறிஞர் ஆவார். அவர் பக்தாத்தின் பைத்துல் ஹிக்மத் (ஹவுஸ் ஆப் விஸ்டம்) உடன் சம்பந்தப்பட்டிருந்தார். அந்த நேரத்தில், ஹவுஸ் ஆப் விஸ்டம் விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கல்வியின் புகழ்பெற்ற மையமாக இருந்ததுடன், இஸ்லாமிய பொற்காலத்தின் சிறந்த அறிஞர்கள் கூடுமிடமாகவும் இருந்தது.

அல்-குவாரிஸ்மி கி.பி. 780 இல் பெர்சியாவில் பிறந்தார். கலீஃபா ஹாரூன் ரஷீத்தின் மகன் கலீஃபா அல்-மஃமூனின் வழிகாட்டுதலுக்கு அமைய ஹவுஸ் ஆப் விஸ்டனில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்ற படித்தவர்களில் ஒருவராவார்.

"ஒரு நபர் நோய் ஏற்பட்டதால் இரண்டு அடிமைகளை விடுவித்தார் என்று வைத்துக்கொள்வோம். அவற்றில் ஒருவரின் மதிப்பு முந்நூறு திர்ஹம், மற்றொருவரின் மதிப்பு ஐநூறு திர்ஹம். முன்னூறு திர்ஹம் மதிப்பிலான அடிமை அவரது ஒரே ஒரு மகளையும், 400 திர்ஹம் மதிப்பிலான சொத்தையும் விட்டு விட்டு, சிறிது நேரத்திற்குப் பிறகு இறந்துவிடுகிறார். பின்னர் அந்த அடிமைகளின் உரிமையாளரும் இறந்துவிடுகிறார். அவரின் வாரிசு அவருடைய ஒரே மகள். எனவே இப்போது அனைவருக்கும் எவ்வளவு பங்கு கிடைக்கும்"?
கணிதத்தின் இந்த குழப்பமான கேள்வி ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட ஒரு புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. இந்த கேள்வி உண்மையில் வாரிசுகள் மத்தியில் சொத்து விநியோகத்திற்கு வழி காட்டுகிறது . அரபு மொழியில் எழுதப்பட்ட இந்த புத்தகம், உலக அளவில் அதன் தலைப்பு 'கிதாப் அல்-ஜாபர்' என்ற பெயரால் அறியப்படுகிறது.
இந்த புத்தகத்தின் ஆசிரியர்தான் இன்று நமது கட்டுரையின் பொருள் - முகமது இப்னே மூசா அல்-குவாரிஸ்மி ஆவார். இவர் மத்திய கிழக்கில் பல பாடங்களில் தேர்ச்சி பெற்றார். நான் (ஜிம் அல்-கலீல்) ஈராக்கில் ஒரு பள்ளியில் படிக்கும் போது ஒரு வரலாற்று கட்டுரையிலே அவரது பெயரை முதலில் கேள்விப்பட்டேன்.

இந்த புத்தகத்தில் விதை கணிதம் என்ற தலைப்பில் அவர் முதல் முறையாக எழுதுகிறார். இந்த வார்த்தை இந்த புத்தகத்தின் தலைப்பிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டது. மற்றும் அதற்கு கணிதத்தின் துணைப் பாடத்தின் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
குவாரிஸ்மியின் பெயரில் உள்ளது போல், அவர் மத்திய ஆசிய நாடான உஸ்பெகிஸ்தானில் அமைந்துள்ள குவாரிஸ்ம் மாகாணத்தைச் சேர்ந்தவர்.
அவரது வாழ்க்கையைப் பற்றி நமக்கு மிகக் குறைவான தகவல்களே உள்ளன. ஆனால் அவர் ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பக்தாத்திற்கு வந்தார் என்பது நமக்கு தெரிய வருகிறது. அந்த நேரத்தில், பக்தாத் சக்திவாய்ந்த அப்பாஸிய கலிபாவால் ஆளப்பட்ட ஒரு பரந்த இஸ்லாமிய பேரரசின் தலைநகராக இருந்தது.
அவர் கலீஃபா அல்-மஃமூனுக்காக வேலை செய்தார். கிரேக்க புத்தகங்களை அரபு மொழியில் மொழிபெயர்ப்பதில் அபிமானியாக இருந்த கலீஃபா மஃமூன், வரலாற்றில் விஞ்ஞான ஆராய்ச்சியில் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட முன்னோடிகளில் ஒருவராக இருந்தார்.

அல்-குவாரிஸ்மி கலீபாவால் உருவாக்கப்பட்ட 'பைத் அல்-ஹிக்மத்' (ஹவுஸ் ஆப் விஸ்டம்) என்ற அமைப்பில் பணியாற்றினார். இது கேட்பதற்கு ஒரு போலி நிறுவனம் போல் தோன்றியது. இது மொழிபெயர்ப்பு மற்றும் அறிவியலில் அசல் ஆராய்ச்சியின் மையமாக இருந்தது. மேலும் அரபு அறிவியலின் பொற்காலம் என்று அழைக்கப்படும் ஒரு சகாப்தத்தின் சிறந்த அறிவாளிகள் இங்கு கூடினர் .
அரபு என்ற சொல் இங்கு பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் பெரும்பாலான புத்தகங்கள் அந்த நேரத்தில் அரபியில் எழுதப்பட்டிருந்தன. ஏனென்றால் அது மன்னராட்சியின் அதிகாரபூர்வ மொழி மட்டுமல்ல, முஸ்லிம்களின் புனித குர்ஆன் நூலிலும் அதே மொழி உள்ளது.
இந்த அறிவியல் புத்தகங்கள் தத்துவம், மருத்துவம், கணிதம், ஒளியியல் மற்றும் வானியல் உள்ளிட்ட பல அறிவியல் பாடங்களை உள்ளடக்கியது. இந்த காலகட்டத்தின் சிறந்த விஞ்ஞான சாதனைகளில், அல்-குவாரிஸ்மியுடன் நேரடியாக தொடர்புடைய சில சாதனைகளை நாம் பார்க்கலாம் .

ஒன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில், கலீஃபா அல்-மஃமூன் வானியல் ஆராய்ச்சிக்காக பக்தாத்தில் ஆய்வகங்களை கட்டினார். ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, கிரேக்க வானியல் பற்றிய விமர்சன ஆய்வுகள் தொடங்கின. இந்த நேரத்தில், அல்-குவாரிஸ்மியின் மேற்பார்வையில் பல ஆராய்ச்சியாளர்கள் சூரியன் மற்றும் சந்திரன் குறித்து பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர்.

இந்த நேரத்தில், ஒரே இடத்தில் அமைந்துள்ள 22 நட்சத்திரங்களின் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை அட்டவணை செய்யப்பட்டது. இதற்கிடையில், அல்-மஃமூன் காசியன் மலையின் சரிவுகளில் மற்றொரு ஆய்வகத்தை கட்ட உத்தரவிட்டார். அங்கிருந்து டமாஸ்கஸ் நகரம் தெளிவாகத் தெரியும். இந்த ஆய்வகத்தை கட்டியெழுப்புவதன் நோக்கம் இது தொடர்பாக கூடுதல் தரவுகளை சேகரிப்பதாகும்.

இந்த வேலை முடிந்ததும், அல்-குவாரிஸ்மியும் அவரது கூட்டாளிகளும் பல நட்சத்திரங்களின் இருப்பிடம் குறித்த தரவு அட்டவணையைத் தயாரித்திருந்தனர்.

இந்த அறிஞர்களால் தொடங்கப்பட்ட மற்றொரு பெரிய திட்டம் இன்னும் தொலைநோக்குடன் இருந்தது.

கிரேக்க வானியலாளர் தொலமி தனது புகழ்பெற்ற புத்தகமான 'த ஜியாகிராபி ' இல் உலகின் புவியியல் தொடர்பான அனைத்தையும் பதிவு செய்தார். இவரது படைப்புகளின் அரபு மொழிபெயர்ப்பு இஸ்லாமிய உலகில் புவியியலில் ஆர்வத்தை உருவாக்கியது என்று கூறப்படுகின்றது.

முக்கிய இஸ்லாமிய நகரங்களான மக்கா அல்லது தலைநகர் பக்தாத் தொலமியின் வரைபடத்தில் சேர்க்கப்படாததால் உலகின் புதிய வரைபடத்தை உருவாக்க அல்-மஃமூன் தனது அறிஞர்களுக்கு அறிவுறுத்தினார். தொலமி சகாப்தத்தில் மக்கா நகரத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் இருக்கவில்லை. பக்தாத் அந்த நேரத்தில் அமைக்கப்படவில்லை என்பதே அதற்கு காரணமாகும்.

அல்-குவாரிஸ்மியும் அவரது சகாக்களும் இந்த இரண்டு நகரங்களுக்கும் இடையிலான தூரத்தை அளவிட முடிவு செய்தனர். இது சம்பந்தமாக, சந்திர கிரகணத்தின் போது அளவீட்டிற்கான கூடுதல் தரவுகளை அவர் சேகரித்தார். அந்த பண்டைய காலகட்டத்தில், இந்த இரண்டு நகரங்களுக்கிடையில் அவர் கணித்த தூரம் இன்றைய புள்ளிவிவரங்களை விட இரண்டு சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. இதற்குப் பிறகு, அவர் மற்ற முக்கியமான இடங்களின் மைய புள்ளிகளை கண்டறிய, அவற்றின் எல்லைகளை மறு பரிசிலனை செய்ய முயன்றார்.

உதாரணமாக :- அவரது வரைபடம் அட்லாண்டிக் பெருங்கடலையும் இந்தியப் பெருங்கடலையும் திறந்த நீர்வழிகளாக சித்தரிக்கின்றது. ஆனால் தொலமி தனது புத்தகத்தில் இவற்றை நிலப்பரப்பு சூழ்ந்த கடல்களாக விவரிக்கிறார்.

அல்-குவாரிஸ்மியின் புத்தகம் 'சூரத் அல்-அர்ஸ்' (உலகின் வரைபடம்) காரணமாக இஸ்லாமியத்தின் முதல் புவியியலாளர் என்ற மரியாதை அவருக்கு உண்டு. இந்த புத்தகம் கி.பி 833 இல் நிறைவடைந்தது. இது கலீஃபா அல் மஃமூன் இறந்த ஆண்டாகும். இந்த புத்தகத்தில், ஐநூறு நகரங்களின் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை அட்டவணைகள் உள்ளன.

இந்த புத்தகத்தில் பல்வேறு இடங்கள், நகரங்கள், ஆறுகள், மலைகள், கடல்கள் மற்றும் தீவுகள் என்பன குறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அட்டவணையிலும், இந்த இடங்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது .

இருப்பினும், இந்த சாதனைகள் அனைத்தும் கணிதத் துறையில் அவர் செய்த சாதனைகளுக்கு முன்னால் மங்கலாகின்றன. எண்கள் மற்றும் எண்களில் எழுதப்பட்ட அவரது ஆய்வுக் கட்டுரைகளால் மட்டுமே தசம எண் முறை (டெசிமல் நம்பர் சிஸ்டம்)முஸ்லிம் உலகில் அறிமுகப்படுத்தப்பட்டது. அவரது 'அல்-ஜு ம் வால்-தஃப்ரிக் பில்-ஹிந்த்' புத்தகம் கணித விஷயத்தில் மிகவும் முக்கியதத்துவம் வாய்ந்தது .

இந்த புத்தகம் கி.பி. 825 இல் எழுதப்பட்டது. இருப்பினும், உண்மையான அரபு மொழிபெயர்ப்பு எதுவும் இல்லை மற்றும் புத்தகத்தின் தலைப்பும் ஒரு யூகம் மட்டுமே.

இருப்பினும், தசம அமைப்பில் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் புத்தகம் இதுவாக இருக்கலாம். "அல்-குவாரிஸ்மி சொல்கிறார் ..." என்ற லத்தீன் மொழியில் எழுதப்பட்ட இந்த வார்த்தைகளுடன் இது தொடங்குகிறது.
கணிதம் தொடர்பான பல விஷயங்கள் இந்த புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. இங்கிருந்துதான் அல்கோரிதம் என்ற சொற்களஞ்சியம் உருவானது. இது உண்மையில் லத்தீன் மொழியில் அல்-குவாரிஸ்மியைப் சொல்லும் முறையாகும். உண்மையில், அல்-குவாரிஸ்மியின் இந்த படைப்பினதும், அதற்கு முன்னர் செய்யப்பட்ட படைப்புகளினதும் மொழிபெயர்ப்புகள் ஐரோப்பாவில் விமர்சிக்கப்பட்டன. ஐரோப்பா ஒரு இருண்ட கட்டத்தை கடந்து கொண்டிருந்த காலம் அது. குவாரஸ்மியின் பணி 'ஆபத்தானது' அல்லது 'மாய மந்திரம்' என்று கருதப்பட்டதற்கு இதுவே காரணம்.
அவரது மிகப்பெரிய படைப்பு நிச்சயமாக விதை கணிதம் குறித்த அவரது புத்தகமாகும். அல்-குவாரிஸ்மி பண்டைய பாரசீக மதமான ஜோராஸ்ட்ரியன் ஐ (பார்ஸி) பின்பற்றியவர். பின்னர் அவர் இஸ்லாமிற்கு மாறினார் என்று கூறப்படுகின்றது. கிதாப் அல்-ஜபரின் முதல் பக்கத்தில், அவர் 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மனிர்ராஹிம்' (ஆரம்பம் அல்லாஹ்வின் பெயரில், இவர் மிகவும் கருணை உள்ளவர்)என்று எழுதியுள்ளார். இன்றும், முஸ்லீம் எழுத்தாளர்கள் எழுதிய பெரும்பாலான புத்தகங்கள் இந்த வாக்கியத்திலிருந்தே தொடங்குகின்றன.

இருப்பினும், அல்-குவாரிஸ்மி பாரம்பரியத்திற்கு ஏற்ப இதை எழுதியிருக்கலாம். ஏனென்றால், அவருக்கு முழு ஆதரவும் தந்த முஸ்லிம் கலிபாவை கோபப்படுத்த அவர் விரும்பவில்லை. இந்த புத்தகத்தில், அல்-குவாரிஸ்மி கணிதத்தின் தெளிவற்ற விதிகளை இணைத்தார். இது ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும்.
பின்னர் அவர் இந்த விதிகளின் வரைவைத் தயாரித்தார். இதன் மூலம் பாரம்பரியம், வர்த்தகம் மற்றும் விவசாயம் தொடர்பான அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.
அல்-குவாரிஸ்மியின் பின்னர் வந்த முஸ்லீம் கணிதவியலாளர்களைப் பாராட்ட வேண்டியது அவசியமாகும். அவர்கள் அவரது படைப்புகளை விளம்பரப்படுத்தினர் . மேலும் ஐரோப்பாவில் அவரது பணிகள் ஏற்படுத்திய தாக்கத்தின் பின்னர் அதன் நம்பகத்தன்மைக்கான சான்றுகளையும் வழங்கினர்.
12 ஆம் நூற்றாண்டில், அவரது புத்தகம் இரண்டு முறை லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. ஒருமுறை பிரிட்டனின் ராபர்ட் ஓச்செஸ்டர் மற்றும் இத்தாலியில் ஜெரார்ட் ஆஃப் கிரெமோனா ஆகியோர் அவரது புத்தகத்தை மொழிபெயர்த்தனர். அவரது பணியை மத்திய கிழக்கில் மிகப் பெரிய கணிதவியலாளராக இருந்த ஃபெப்னாச்சியும் அறிந்திருந்தார். அல்-குவாரிஸ்மியின் படைப்புகளை அவர் தனது புகழ்பெற்ற புத்தகமான 'லேபர் அபாச்சி' இல் மேற்கோள் காட்டினார்.

இங்கே நாம் கணிதத்தின் ஒரு கிளையை கண்டுபிடித்ததற்காக அல்-குவாரிஸ்மிக்கு பெருமை வழங்கவில்லை என்பதில் கவனமாக இருக்க வேண்டும். அதற்கு காரணம், இன்று நாம் இதற்குப் பயன்படுத்தும் பெயர், 'அல்ஜீப்ரா', அல்- குவாரிஸ்மி புத்தகத்தின் பெயரிலிருந்துதான் நடைமுறைக்கு வந்தது.
எடுத்துக்காட்டாக:- கிரேக்க மற்றும் பாபிலோனிய கணிதவியலாளர்கள் அல்-குவாரிஸ்மிக்கு நீண்ட காலத்திற்கு முன்பே கணித சமன்பாடுகளை தீர்த்துக் கொண்டிருந்தார்கள் என்பதற்கான சான்றுகள் உள்ளன. இது தவிர, அவருக்கு முன் சிறந்த கிரேக்க கணிதவியலாளர் டியோபாண்ட் மற்றும் இந்து கணிதவியலாளர் பிரம்மகுப்தா ஆகியோரும் இதில் பணியாற்றியுள்ளனர்.

இந்த விஷயத்தின் தலைப்பை அவரது புத்தகங்களுடன் இணைத்திருக்க முடியாதா ? என்னைப் பொறுத்தவரை இல்லை, ஏனென்றால் அல்-குவார்ஸ்மியின்படி , அவரது புத்தகம் ஒரு வழிகாட்டியாக இருந்தது. அதன்படி, விதை கணிதத்தின் மூலம் தரவை மாற்ற முடியும்.
இருப்பினும் அவரது நோக்கம் இதைவிட பெரியதாக இருந்தது. அர்த்தமெடிக்ஸில் எளிதான மற்றும் மிகவும் பயனுள்ள சில விஷயங்களைச் சொல்வதே தனது புத்தகத்தின் நோக்கம் என்று அவர் தெளிவுபடுத்தினார். உதாரணமாக, ஆண்களுக்கு சொத்தை விநியோகிக்கும் பணியில், வணிகத்தையும் சொத்துக்களையும், நீதித்துறை அமைப்புக்கு முன்னால் பிரிக்க வேண்டியது அவசியம் .இது தவிர, அவர்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல், நிலத்தை அளவிடுதல், கால்வாய்களை தோண்டுவது, வடிவியல் வரையறை போன்ற பல விஷயங்களில் கணிதம் தேவைப்படுகிறது.

அல்-ஜாபர் புத்தகம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு தத்துவார்த்த இயற்பியலாளராக, முதல் பகுதியில் எனக்கு மிகவும் சுவாரஸ்யமான விஷயம் உள்ளது. ஏனெனில் இங்கே அல்-குவார்ஸ்மி விதை கணிதத்தின் விதிகளை உருவாக்கியிருக்கிறார். கேள்விகள் மற்றும் வெவ்வேறு சமன்பாடுகளை தீர்க்க, வெவ்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தவும். அவர் அளித்த ஒவ்வொரு பதிலுக்கும் சித்திரங்கள் ஆதாரமாக உள்ளன.

புத்தகத்தின் இரண்டாம் பகுதி அவற்றின் முறைகளைப் பயன்படுத்துவது பற்றியது. இதன் மூலம் அவர்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ள அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். இருப்பினும், இந்த புத்தகம் இன்று விதை கணிதத்தில் காணப்படும் புத்தகங்களிலிருந்து மிகவும் வித்தியாசமானது. தனது புத்தகத்தின் பக்கங்களை சின்னங்கள் மற்றும் சமன்பாடுகளால் நிரப்புவதற்கு பதிலாக, இதையெல்லாம் மிகவும் சாதாரண மொழியில் எழுதியுள்ளார்.

விதை கணிதத்தின் சின்னங்கள் மூலம் இரண்டு வரிகளில் சொல்லக்கூடிய விஷயம் இரண்டு பக்க விளக்கத்தின் மூலம் விளக்கப்பட்டது.
அல்-குவாரிஸ்மிக்கு நீண்ட காலத்திற்கு முன்பே, டய்பெண்ட் மற்றும் இந்து கணிதவியலாளர்கள் தங்கள் சமன்பாடுகளை அடிப்படை சின்னங்களுடன் விளக்கிக் கொண்டிருந்தார்கள் என்று இங்கு நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் அல்-குவாரிஸ்மியும் அவரது விதை கணிதமும் இருபடி சமன்பாடுகளுக்கு அப்பால் செல்ல முடியவில்லை. மற்றும் டய்பெண்ட்ஸ் மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு தேடினார். அல்-குவாரிஸ்மியின் விதை கணித கேள்விகளை தீர்க்கும் முறைகளும் பழைமையானவை, அதாவது 'கப்லேடிங் தா ஸ்கொயர்' போன்றவற்றை தீர்க்கும் முறை, பின்னர் அவற்றை ஆதரிக்கும் வாதங்கள் பலவீனமானவையாக இருந்தன .

அல்-குவாரிஸ்மி பிரபலமானத்திற்கு காரணம், அவரது புத்தகத்தினால்தான். விதை கணிதமே பிரபலமானது என்றும் நான் கேள்விப்பட்டேன். ஏனென்றால் அவர் அதை மிகவும் எளிதாக்கியதால் பலர் அதைப் பயன்படுத்த முடிந்தது. இருப்பினும், இது ஒரு பலவீனமான வாதம்.
இன்றைய புகழ்பெற்ற விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் பிரபலமாக இருப்பதற்கான காரணம் அவரது 'எ ப்ரீப் ஹிஸ்ட்ரீ ஆப் டைம்' புத்தகம்தான், அண்டவியல் பற்றிய அவரது முக்கியமான ஆராய்ச்சி மற்றும் கருத்துக்கள் பற்றிய அவரது கோட்பாடு அல்ல என்றும் நாம் கூறலாம். இவை அனைத்திற்கும் மாறாக ,சின்னங்களை யார் பயன்படுத்தினார்கள் ? அல்லது ஏதேனும் வடிவியல் சான்றுகள் இருந்தனவா?, இந்த சமன்பாடுகள் எவ்வளவு சிக்கலானவை, அவற்றின் எழுத்து பொது மக்களை சென்றடைந்ததா? இல்லையா? என்பது விவாதத்தில் முக்கியமல்ல.

உலக வரலாற்றில் பெரிய பணக்காரராக இருந்த முஸ்லிம் மன்னர் மன்சா மூசா - ஒரு சுவாரசிய வரலாறு

உலகின் மிகவும் பணக்கார மனிதர் யாரென கேட்டால் உடனே பில் கேட்ஸ், மார்க் சக்கர்பெர்க் மற்றும் ஜெஃப் பெஸோஸ் போன்றவர்கள் நினைவுக்கு வருவார்கள். ஆனால், மன்சா மூசா பற்றி பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.
ஆஃபிரிக்கா நாடான மாலியை ஆண்ட மன்சா மூசா உலக வரலாற்றிலேயே பணக்கார மனிதராகக் கருதப்படுகின்றார். 1280 முதல் 1337 வரை மாலியை மூசா ஆண்ட போது, தங்கம் உள்ளிட்ட நிறைய கனிம வளங்கள் அங்கு கிடைத்தன.
உலகம் முழுவதும் தங்கத்திற்கான தேவை உச்சத்தில் இருந்த சமயத்தில் அவர் வளமிக்க அந்நாட்டை ஆண்டார். இவரது இயற்பெயர் மூசா கெய்ட்டா. இவருக்கு முடிசூட்டப்பட்ட பிறகு மன்சா என்று அழைக்கப்பட்டார். மன்சா என்றால் மன்னர்.
தற்போதைய செனகல், காம்பியா, புர்கினா பாசோ, மாலி, நைஜர், நைஜீரியா ஆகியவை இவரது ஆட்சியின் கீழ் இருந்த பகுதிகளாகும். இவர் கட்டிய பல மசூதிகள் இன்னும் உள்ளன.

மன்சா மூசாவுக்கு எவ்வளவு சொத்து இருந்தது?

தற்போதைய காலத்தில் மன்சா மூசாவின் சொத்து மதிப்பைக் கணக்கிடுவது கடினமான ஒன்று. ஆனாலும் அவருக்கு 400,000 மில்லியன் டாலர் சொத்துகள் இருந்ததாக நம்பப்படுகிறது. இது இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட 2.9 டிரில்லியன் ரூபாயாகும். (2900000000000 ரூபாய் அல்லது 2.9 லட்சம் கோடி ரூபாய்)

இதில் பணவீக்கம் சேர்க்கப்படவில்லை என்றால், உயிருடன் இருக்கும் பணக்காரர்களில் ஜெஃப் பெஸோஸ் சொத்து மதிப்பு அதிகபட்சமாக இருக்கும்.
இருந்தாலும் இந்த தகவல்கள் குறித்து கேள்வி எழுப்புபவர்களும் உள்ளனர்.

மக்கா பயணம்:

இஸ்லாமியர்களின் புனித நகராகக் கருதப்படும் மக்காவுக்கு மன்சா மூசா இவர் பயணம் செய்தது குறித்து சுவாரசியமான கதை உள்ளது.
மூசாவுடன் 60 ஆயிரம் பேர் மக்காவுக்குப் பயணம் செய்தனர்.
அத்துடன் 80 ஒட்டகத்தில் 136 கிலோ தங்கத்தையும் அவர்கள் கொண்டு சென்றனர்.
மூசா மிகவும் தாராள மனதுடையவர் என கூறப்படுகிறது. எகிப்து தலைநகரான கெய்ரோவை அவர்கள் கடக்கும் போது, அங்கிருக்கும் ஏழை மக்களுக்கு மூசா தங்கத்தை தானமாக வழங்கினார் .
மாலியிலும் ஆஃபிரிக்காவிலும் பல பள்ளிகளையும், நூலகங்களையும் தன் ஆட்சி காலத்தில் மூசா கட்டினார்.
25 அண்டுகள் மன்னராக இருந்த மூசா 1337ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

முஸ்லிம்களின் வரலாறு அழிக்கப்படுவதால் தான் இன்னும் அறியாமலேயே இருக்கின்றோம்.

முஸ்லிம்கள் என்பவர்கள் வெறுமேனே தொழுது கொண்டும் ஓதிக் கொண்டும் அடுத்தவர் எப்படியிருந்தால் நமக்கு என்ன என்று இருப்பவர்களா ?

Special Notes

இஸ்லாத்தை ஆராய்ச்சி செய்யக் கூடாது என்றால் அதற்கான குர்ஆன் ஹதீஸ் ஆதாரத்துடன் விளக்குக ?

ஏன் எதற்கு என்று தெரியாமலேயே மூடநம்பிக்கையில் வசிக்கும் அநேகர் உண்டு. உறங்கிக் கொண்டிருக்கும் அறிவை தட்டி எழுப்ப ஒரு கல்வி உங்களை அழைக்கிறது.

நல்லதை பயின்று நல்ல அறிவுடைய சமுதாயத்தை உருவாக்குவோம்